# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
# மேட்டூர் நகராட்சி

நிகழும் பிலவ வருடம் பங்குனி மாதம் 28 ம் தேதி ஆங்கில ஆண்டு 11.04.2022 ம் தேதி திங்கட்கிழமை மாலை 04.00 மணிக்கு மேட்டூர் நகர்மன்ற கூடத்தில் அவசர கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைபெற்றது.

**நாள் : 11.04.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

## மன்றப் பொருள்

**1.** அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

பதிவு செய்யலாம்

(ந.க.எண்.1809/2022/அ1)

**தீர்மான எண் 22 நாள் 11.04.2022**

**பதிவு செய்யப்பட்டது**

**2.** தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி

அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி | 1.75 |

| | |
|---|---|
| கட்டடங்கள் | |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி மற்றும் காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் மேட்டூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| **வ. எண்.** | **செலவின வகைப்பாடு** | **தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்)** |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை | 9.5 |

| | | |
|---|---|---|
| | மின்கட்டணம் | |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 2.81 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 21.08 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | P.F 0.98<br>CPS General 0.62<br>Co-Operative Society 1.03<br>NHIS 0.12<br>Out Sourcing 1.24<br>P.F Interest 1.20<br>CPS WS 0.12<br>DBC 0.07<br>**மொத்தம் 5.38** |
| | **மொத்தம்** | **38.77** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், மேட்டூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி மற்றும் காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **தற்போதைய மண்டலம்** | **தற்போதைய மண்டல மதிப்பு** | **புதியதாக நிர்ணயம் செய்யப்படும் மண்டல மதிப்பு பரப்பளவு (ச.அடி)** | **உயர்வு செய்வதற்கான காரணி** | **புதிய மண்டல மதிப்பு (ரூ.) ஒரு சதுர அடிக்கு** |
|---|---|---|---|---|---|
| | | | **குடியிருப்பு** | | |
| 1 | A | 1.50 | 1 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.88 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.5 | 2.25 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி.வரை | 1.75 | 2.63 |
| | | | 1801க்கும் மேல் | 2 | 3.00 |
| | | | **குடியிருப்பு இல்லாதவை** | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 2.63 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 | 3.00 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 2.63 |
| 2 | B | 0.90 | **குடியிருப்பு** | | |
| | | | 1 முதல் 600 ச.அடி வரை | 1.25 | 1.13 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.5 | 1.35 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி.வரை | 1.75 | 1.58 |
| | | | 1801க்கும் மேல் | 2 | 1.80 |
| | | | **குடியிருப்பு இல்லாதவை** | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 1.58 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 | 1.80 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 1.58 |
| | | | | | |
| 3 | C | 0.60 | **குடியிருப்பு** | | |
| | | | 1முதல் 600 ச.அடி வரை | 1.25 | 0.75 |
| | | | 601 முதல் 1200 ச.அடி..வரை | 1.5 | 0.90 |
| | | | 1201 முதல் 1800 ச.அடி.வரை | 1.75 | 1.05 |
| | | | 1801க்கும் மேல் | 2 | 1.20 |
| | | | **குடியிருப்பு இல்லாதவை** | | |
| | | | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடங்கள் | 1.75 | 1.05 |
| | | | வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 | 1.20 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 1.05 |

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி மற்றும் காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மேட்டூர் நகராட்சி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், அரசாணை(நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ல் தெரிவித்துள்ளவாறு சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு செய்து வரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1809/2022/அ1)**

**தீர்மான எண்** 23 **நாள்** 11.04.2022

**மேட்டூர் நகராட்சி பொது மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தவும், பொது சீராய்வு செய்து சொத்துவரி மற்றும் காலிமனைவரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**3.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு செய்யும் பணியினை மேற்க்கொள்ள உரிய சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவத்தினை திருச்சி, மல்டிபர்பஸ் நிறுவனம் மூலம் அச்சடித்து வாங்கி கொள்ளவும், சொத்துவரி சீராய்வு செய்யப்படுவதை தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்திடவும் மற்றும் சேலம் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.100000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1809/2022/அ1)

**தீர்மான எண்** 24 **நாள்** 11.04.2022

**அனுமதிக்கப்பட்டது**

**4.** இந்நகராட்சியின் 2022–2023 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடும், 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1835/2022/பி1)**

**தீர்மான எண்** 25 **நாள்** 11.04.2022

**பதிவு செய்யப்பட்டது**

**5.** மேட்டூர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொது மக்களின் பங்களிப்புடன் நகராட்சிக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின்27.12.2021ந் தேதிய ந.க.எண்.27519/7/2021/பி2–ல் தெரிவிக்கப்பட்டதின்படி மேட்டூர் நகராட்சி வார்டு எண்.30 மாதையன்குட்டையில் உள்ள எரிவாயு தகனமேடையினை மேம்படுத்தும் பணிக்கு திட்டமதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 லட்சத்தில் மேட்டூர் அமைதி

அறக்கட்டளை தொண்டு நிறுவனத்திடமிருந்து பங்களிப்பு தொகையாக 1:2 விகிதாச்சார அடிப்படையில் ரூ.15.00 இலட்சம் பெறப்பட்டு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் 27519–10/2021/P2 நாள்.20.01.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், சேலம் அவர்களுக்கு திட்ட பிரேரணைகளை சமர்ப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் சேலம் அவர்களின் ந.க.எண்.4161/2021/பி1 நாள்.25.01.2022–ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட எரிவாயு தகனமேடை மேம்படுத்தும் பணியினை மேட்டூர் அமைதி அறக்கட்டளை தொண்டு நிறுவனத்திற்கு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 2750/2021/இ1)**

**தீர்மான எண் 26 நாள் 11.04.2022**

**பதிவு செய்யப்பட்டது**

**6.** தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை, மாவட்ட ஆட்சியர் சேலம், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவுகளின்படி நடந்து முடிந்த சாதாரண நகர்புற உள்ளாட்சி தேர்தல்–2022 க்கு மேட்டூர் நகராட்சியில் 55 வாக்குச்சாவடிகள், நகராட்சி அலுவலகம் மற்றும் வாக்கு எண்ணும் மையம் ஆகிய இடங்களில் தேவையான மின்வசதிகள், சாமியானா, ஜெனரேட்டர் மற்றும் இதர வசதிகள் செய்யப்பட்டதற்கும், தேர்தலுக்கு தேவையான படிவங்கள், பதிவேடு மற்றும் எழுது பொருட்கள் கொள்முதல் செய்யவும், தேர்தல் பணியில் ஈடுப்பட்ட அனைத்து பணியாளர்களுக்கு உணவு வழங்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்பு விழா ஏற்பாடு மற்றும் தலைவர், துணை தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் ஏற்பாடு ஆகிய பணிகள் உடனடியாக செய்ய வேண்டியிருந்ததால் தமிழ்நாடு நகராட்சி சட்ட விதிகள் 1920–ன் விதி எண்.15ன் கீழ் கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | வாக்கு எண்ணும் மையம் M.A.M மேல்நிலைப்பள்ளி மாதையன்குட்டையில் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்தல் மற்றும் பள்ளியில் அமைந்துள்ள பாதுகாப்பு அறை (Strong Room) தேவையான ஏற்பாடுகளை செய்யும் பணி | ரூ.4,93,351/– |
| 2 | அனைத்து வாக்குசாவடி மையங்களில் (11 பள்ளிகள், 55 வாக்குசாவடி நிலையங்கள்) சாமியானா, (துணிபந்தல்), மின் விளக்குகள், தேவையான சேர், டேபிள், தடையில்லா மின்சார வசதிக்காக ஜெனரேட்டர் ஏற்பாடு செய்யும் பணி | ரூ.3,73,560/– |
| 3 | நகராட்சி அலுவலகத்தில் மின்சார தடை ஏற்படாமல் இருக்க ஜெனரேட்டர், வேட்பாளர்களுக்கான அறிவுரை மற்றும் ஆலோசனைக்கூட்டம், வாக்கு பதிவு இயந்திரத்தில் வாக்கு சீட்டினை பொருத்தும் பணிக்கு டேபிள், சேர் மற்றும் வேட்பாளருக்கான குடிநீர் வசதி போன்றவை ஏற்பாடு செய்யும் பணி | ரூ.69,353/– |
| 4 | வெற்ற பெற்ற நகர்மன்ற உறுப்பினர்களுக்கு பதிவி ஏற்கும் விழாவில் விழா மேடை, துணிப்பந்தல், சேர், பொதுமக்கள் அனைவருக்கும் குடிநீர் வசதி, விழா மேடையில் குளிர்சாதன வசதி ஏற்பாடு செய்யும் பணி | ரூ.1,86,463/– |
| 5 | அனைத்து வாக்குசாவடிகளிலும் CCTV கேமரா மற்றும் Web Streaming இயங்க ஏதுவாக 15A Power Plug, 5A Plug Point தலா 2 எண்ணிக்கை, வாக்களிக்க வரும் பொது மக்களுக்கு குடிநீர் வசதி, வாக்குசாவடியின் எல்லை 100மீ மற்றும் 200மீ கோடுகள், மரப்பலகை சாய்வு தளங்கள் மற்றும் கைப்பிடி மற்றும் நகராட்சி அலுவலக பாதுகாப்பு அறை (Strong Room) ஏற்பாடு செய்யும் பணி | ரூ.3,74,298/– |
| 6 | தேர்தல் நாளன்று 55 வாக்கு சாவடிகளில் பணிபுரிந்த அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்கள், வாக்கு எண்ணும் நாளன்று நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், வாக்கு எண்ணும் அலுவலர்கள் மற்றும் வாக்கு எண்ணும் மையத்தில் பணிபுரிந்த காவலர்களுக்கு உணவு வழங்கியதற்கான பட்டியல் தொகை | ரூ.3,66,689/– |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.232/2022/இ1)**

**தீர்மான எண்** 27 **நாள்** 11.04.2022

பதிவு செய்யப்பட்டது